**நாங்கள் எங்கள் வரலாற்றை எழுதவில்லை. பாரம்பரியம் என்பது பேச்சோடு நின்று விடுகிறது. நாங்கள் எதையுமே பேணிப்பாதுகாப்பதில்லை. மன்னன் சாஜஹான் காலையில் என்ன உணவு அருந்தினான் என்று தொடங்கி அத்தனையும் பதிவு செய்யப்பட்டன என்று ஒரு பத்திரிகையாளரான நண்பர் சொன்னார். அந்தளவு இல்லையென்றாலும் எங்கள் வாழ்வு, எங்கள் மக்கள், எங்கள் கலைஞர்கள் பற்றிய தகவல்கள் சேகரிக்கப்படவேண்டும். பதிவு செய்யப்படவேண்டும். இந்த நோக்குடன் "தாய்வீடு" பத்திரிகை எங்கள் ஈழத்து மண்ணின் கிராமங்களில், ஊர்களில் வாழ்ந்த பிரபலமடைந்தவர்களுடன், தெரியப்படாமல் போய்விட்ட எங்கள் கலைஞர்களைப் பற்றியும் எழுதும்படி வேண்டுகோள் விடுக்கிறது. கட்டுரைகளை சுருக்கமாக, எழுதி அனுப்புங்கள். களம், 'தாய்வீடு' தரக் காத்திருக்கிறது. கருத்து உங்களுடையது. கட்டுரைகளை செதுக்கி சொற்சித்திரங்களாக்கும் பொறுப்பு எங்களுடையது.**

*K.S. பாலச்சந்திரன்*

## ஆழத்து முத்துக்கள் 44

# 'கலைச்சித்தர்' சோக்கல்லோ சண்முகநாதன்

சண்முகநாதனை அறியாதவர்கள் கூட சோக்கல்லோ சண்முகத்தை அறிவர். 1935ம் ஆண்டு ஒகஸ்ற் மாதம் 1ந் திகதி, ஏழாலை என்ற படைப்பாளிகள் பலர் பிறந்த மண்ணில் பிறந்த இவர், 65 வருட கால நாடகத்துறை அனுபவமுடையவர். இவர் வானொலியில் வர்ணனை, மேடை நடிப்பு, வில்லிசை, எழுத்துத்துறை, மேடைப்பேச்சு உட்பட பல துறைகளில் திறமைகாட்டிய கலைஞர். இலங்கையிலும் அயல்நாடுகளிலும் தன்னுடைய கலை வடிவங்களால் மக்களை மகிழ்வித்தவர்.

'லண்டன் கந்தையா' புகழ் சானா இலங்கை வானொலியில் நாடகத் தயாரிப்பாளராக இருந்த பொற்காலத்தில் இலங்கை வானொலியில் பலராலும் விரும்பிக் கேட்கப்பட்ட தொடர்நாடகம் 'விதானையார் வீட்டில்' என்பதாகும். ஏழாலையை பிறப்பிடமாகக் கொண்ட புகழ்பெற்ற எழுத்தாளர் இலங்கையர் கோன் எழுதிய இந்த சுவையான நாடகத்தை என் சிறுவயதில் 'தவமிருந்து' கேட்டு சுவைத்த ஞாபகம் இருக்கிறது.


இந்த நாடகத்தில் விதானையாராக நடித்தவர், பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள். இந்த நாடகத்தில் சோக்கல்லோ சண்முகநாதனும் வந்திருக்கிறார். என்ன... ஆச்சரியமாக இருக்கிறதா?

அவர் அந்த நாடகத்தில் நடிக்கவில்லை. ஆனால் ஒரு பாத்திரமாக வந்தார் எப்படி என்கிறீர்களா? இலங்கையர்கோன் தன் உறவுக்காரரான சண்முகநாதனை, 'சண்முகவட்டன்' என்று செல்லமாக அழைப்பது வழக்கமாம். எனவே தான் வானொலித் தொடர் நாடகம் எழுதியபொழுது, 'சண்முக வட்டன்' என்றொரு பாத்திரத்தையே உருவாக்கிவிட்டாராம். இந்த சுவையான தகவலை சோக்கல்லோ சண்முகம் அவர்களே என்னுடன் பகிர்ந்து கொண்டார்.

1945ம் ஆண்டில் தனது 10வது வயதில் 'சிறீமுருகன்' என்ற மேடை நாடகத்தில் முதன் முதலாக நடித்தவர். தொடர்ந்து 'குணம் குன்றினால்', 'சீதனம்', 'அடிப்பேன் பல்லுடைய' போன்ற மேடை நாடகங்களில் நடித்திருக்கிறார். இவரது 'சோக்கல்லோ நகைச்சுவை கதம்பம்' புகழ்பெற்ற நிகழ்ச்சியாகும்.

'சோக்கல்லோ சண்முகம்' என்ற இவரது நகைச்சுவை நாடக பாத்திரமும், ஏழாலையில் வாழ்ந்த அப்பாவியான ஒரு மனிதரை நினைவூட்டும் உண்மைப் பாத்திரந்தான் என்றும் சொன்னார். இந்த நாடகம் மேடையிலும், தொலைக்காட்சியிலும், வானொலியிலுமாக பலநூறு தடவைகள் நிகழ்த்தப் பட்டுள்ளது.

குழந்தை சண்முகலிங்கத்தின் 'எந்தையும்



தாயும்', மஹாகவி உருத்திரமூர்த்தியின் 'கோடை', 'பிறந்தமண்' ஆகிய நாடகங்கள் இவருக்கு புகழ் சேர்த்தன.

கோடை பாநாடகத்தில் தாசிசியஸின் இயக்கத்தில் 'முருகப்பு' என்ற சுவையான சிறு பாத்திரமொன்றில், ஒளிவட்டத்தில் நின்று கொண்டு

*சங்கரப் பிள்ளை விதானை*
*இங்கு வந்த தேனாம்? ங?*
*திங்களன்று அடுத்த ட டுப்*
*புங்கன் ஏசினானாம்? ங?*

*தங்கள் ட டு மூலையிற்*
*தழைத்து நின்ற வெண்டிக் கன்றை*
*உங்கள் ட டில் ஆடு வந்து*
*திங்கு தென்று தொங்கித் தொங்கித்*
*திங்களென்று அடுத்த வீட்டுப்*
*புங்கன் ஏசினானாம்? ங?....*
*கேள்விப்பட்ட நேரம் தொட்டு*
*உடல் துடிக்குதே!*

என்று பாடி, அதற்குரிய ஆட்டத்தை, சோக்கல்லோ சண்முகம் ஆடியபொழுது, கரகோஷத்தால் சபை அதிர்ந்தது என்று, இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகும் ஞாபகத்தில் வைத்திருந்து இவருக்கு சொல்லியிருக்கிறார், நாடக ஆர்வலர் ஸ்ரீஸ்கந்தன்.

பின்னர் கலைக்கழக நாடகப்போட்டிக்காக, தானே கோடை நாடகத்தை தயாரித்து, இயக்கியதோடு, பிரதான நாயனக்காரர் பாத்திரத்திலும் நடித்த, சண்முகநாதன், சிறந்த தயாரிப்புக்கான விருதையும் வென்றார்.

வில்லுப்பாட்டில் அண்மைக்காலம் வரை, கொழும்பிலும், ஏனைய பகுதிகளிலும் இவரது வில்லுப்பாட்டுக்குழுவினர் பின்வரும் தலைப்புக்களில் வில்லுப்பாட்டு நிகழ்ச்சிகளை சிறப்பாக நடத்தியிருக்கிறார்கள்.

- *மகாகவியின் கண்மணியாள் காதை.*
- *ராமகிருஷ்ணபரமஹம்சர்.*
- *ஒளவையார்.*
- *கவிராஜன் கதை.*
- *சக்தி மஹிமை.*
- *சத்யசாயிபாபா.*
- *கண்ணதாசனின் இயேசு காவியம்.*
- *சுவாமி விபுலானந்தர்.*
- *பட்டுக்கோட்டை கலியாணசுந்தரம்.*
- *எம்.ஜி.இராமச்சந்திரன்.*

இவர் கலைத்துறைக்கு ஆற்றிய நீண்டகால சேவையின் பயனாக "மக்கள் கலைஞன்", "சமாதான நட்சத்திரம்", "தேசத்தின் கண்", "கலாபூஷணம்", "கலைச்சித்தர்" போன்ற கௌரவங்களைப் பெற்றுள்ளார்.

'எந்தையும் தாயும்' நாடகத்தில் இவரது நடிப்பிக்காக இலங்கைக் கலைக்கழகத்தின் சிறந்த நடிகருக்கான 2007ஆம் ஆண்டு விருது இவருக்குக் கிடைத்தது. உலக சாதனைக்காக ஏழு மணி நாற்பது நிமிடமாக குறிப்புகள் எதுவுமின்றி "நானும் தமிழும்" என்ற மகுடத்தில் தொடர்ந்து பேசியவர்.

இலங்கையில் ரூபவாகினி தொலைக்காட்சி வழங்கிய நாடகங்களிலும் வில்லுப்பாட்டு நிகழ்ச்சிகளிலும் பங்குபற்றியவர். தெய்வம் தந்த வீடு, பொன்மணி போன்ற சில இலங்கைத் திரைப்படங்களிலும் இவர் நடித்துள்ளார்.

தனது இளமைக்காலத்திலேயே 'கோமதியின் கணவன்' என்ற நாவலை எழுதி வெளியிட்ட இவர் இலங்கையில் 'இருக்கிறம்' சஞ்சிகையில் 'பட்சமுள்ள ஆச்சிக்கு' என்ற கட்டுரைத் தொடரை எழுதிவந்தார். பின்னர் கனடா 'தாய்வீடு' பத்திரிகையில் 'இப்படியும் மனிதர்கள்' என்ற தொடரை எழுதியிருக்கின்றார்.

கனடாவில் புலம்பெயர்ந்து வாழும் 'சோக்கல்லோ' சண்முகநாதன், சிறந்த பேச்சாளராக இலக்கிய விழாக்களில் தற்போது பரிணமித்து வருகிறார். வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் பங்குபற்றிவரும் இவர், தனது அனுபவங்களை தொகுத்து நூல் வடிவில் கொண்டு வருவதோடு, தன் முதல் நாவல், சாதனைப்பேச்சு என்பனவற்றையும் வெளியிடும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறார். தனது விருப்பத்துக்குரிய கலை வடிவமான வில்லுப்பாட்டை கனடாவிலும், சிறப்புடன் அரங்கேற்றவேண்டும் என்ற கனவுடன் அதற்கான ஆயத்தங்களில் ஈடுபட்டு வரும் இவரது கனவுகள் நனவாகவேண்டும்.

இந்த மூத்த கலைஞனுக்கு ஆதரவு கொடுக்க வேண்டியது எங்கள் முக்கிய கடமை. தொடரட்டும் தளராத அவர் கலைப்பணி.

**- கே.எஸ். பாலச்சந்திரன் -**



ksbala@thaiveedu.com

■ ■ ■

கலைஞர்கள் பற்றிய விபரங்களையும் அவர்களுடைய புகைப்படங்களுடன் உங்களுடைய பெயர், தொலைபேசி இலக்கம், புகைப்படம் மற்றும் மின்னஞ்சல் முகவரியையும் தாய்வீட்டிற்கு அனுப்பிவையுங்கள்.

**Editor**
**P.O.Box #63581**
**Woodside Square**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**

**Fax : 416.849.0594**
**E-mail : info@thaiveedu.com**

■ ■ ■

இணையத்தளத்திலும் 'தாய்வீடு'

**www.thaiveedu.com**